

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன், சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ், விஜயன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, முரசொலி எம்.பி., வை.செல்வராஜ் எம்.பி., க.மாரிமுத்து, பி.ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு தலையா மங்களம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரிசிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல் , நகர செயலாளர்கள் வீரா. கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன், ராமராஜன், சோம.செந்தமிழ்ச்செல்வன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.




திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் ஒன்றியச் செயலாளர் சுந்தர.ஜெயபால், காங்கிரஸ் குமரன், வி.சி.க பன்னீர் செல்வம், தே.மு.தி.க சுகுமாரன் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் கே.என்.நேரு தலைமை! திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல்வீரர்கள் - வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்!

திருவெறும்பூர, ஏப். 1 -

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியின் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் வேட்பாளர் அறிமுகக் கூட்டம், பெல் (BHEL) தொ.மு.ச. தொழிற்சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

தலைமை மற்றும் முன்னிலை தி.மு.க. முதன்மைச் செயலாளரும், திருச்சி மேற்கு தொகுதி வேட்பாளருமான கே.என்.நேரு இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளான:

ராஜலிங்கம் (காங்கிரஸ் தெற்கு மாவட்டச் செயலாளர்) ரெக்ஸ் மாமன்ற உறுப்பினர் தேவராஜ் (கொங்கு தேச தமிழ் மக்கள் கட்சி) மணவை தமிழ் மாணிக்கம் (ம.தி.மு.க.) ராஜ்குமார் (சி.பி.ஐ. மாவட்டச் செயலாளர்)

டி.வி. கணேஷ் (தே.மு.தி.க. மாநகர மாவட்டச் செயலாளர்)

சேகர் (சி.பி.எம்.) மற்றும் திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது: முதல் முறை வேட்பாளர் போன்ற உணர்வு: “மூன்றாவது முறையாக நான் வேட்பாளராக நிறுத்தப்பட்டாலும், முதல் முறை போட்டியிடும் வேட்பாளரைப் போலவே மக்களுக்காகப் பணியாற்றுவதையே எனது கடமையாகக் கருதுகிறேன்.”

சென்டிமென்ட் தளம்: “2016 மற்றும் 2021 ஆகிய தேர்தல்களில் எந்த இடத்தில் வைத்து நான் வேட்பாளராக அறிமுகப்படுத்தப் பட்டேனோ, முத அதே இடத்தில் 2026 தேர்தலுக்கும் என்னை அறிமுகப்படுத்த வருகை தந்துள்ள அண்ணன் கே.என்.நேரு அவர்களை வரவேற்கிறேன். அவர் திருச்சி மேற்கு தொகுதியில் அமோக வெற்றி பெற வாழ்த்துகிறேன்.”

தொகுதி மேம்பாட்டுப் பணிகள்: “திருவெறும்பூர் தொகுதியில் கழிவறை, பட்டா மற்றும் சாலை வசதி போன்ற பொதுமக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டுள்ளது. தமிழகத்தின் இரண்டாவது பெரிய ஜல்லிக்கட்டு மைதானம் சூரியூரில் அமைக்கப்பட்டதும், தமிழகத்தின் முதல் மாதிரிப் பள்ளி நமது தொகுதியில் திறக்கப்பட்டதும் நமக்குப் பெருமை.”

மீதமுள்ள வாக்குறுதிகள்: “மக்களின் கோரிக்கைகளில் 70 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. விடுபட்ட இதர கோரிக்கைகள் அனைத்தும் தேர்தல் முடிந்து மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்ததும் முழுமையாக நிறை வேற்றப்படும்.”

முடிவுரை:

தேர்தலுக்கு இன்னும் 23 நாட்களே உள்ள நிலையில், நிர்வாகிகள் அனைவரும் அயராது உழைத்து மீண்டும் திமுக ஆட்சியை அரியணையில் ஏற்றப் பாடுபட வேண்டும் என அமைச்சர் பேசினார். இறுதியாக, தமக்கு உறுதுணையாக இருக்கும் பெல் தொமுச தொழிலாளர்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

திருவெறும்பூர் தொகுதியில் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் வெற்றி, முதல்வருக்கு நாம் அளிக்கும் முதல் வெற்றியாக இருக்க வேண்டும்: என அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

திருவெறும்பூர் தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

“அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளி கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் அந்தத் துறைக்கே ஒரு தனிப் பெருமை கிடை த்துள்ளது. திருவெறும்பூர் தொகுதியில் அவர் மூன்றாவது முறையாகப் போட்டியிட வேண்டும் எனப் பலரும் விருப்பம் தெரிவித்துள்ளனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருவெறும்பூர் தொகுதியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுத் தந்துள்ளனர். வரும் சட்டமன்றத் தேர்தலில் திருச்சி மேற்கு தொகுதியை விட அதிக வாக்கு வித்தியா சத்தில் திருவெ றும்பூர் தொகுதியில் மகேஷ் பொய்யாமொழியை வெற்றி பெறச் செய்ய வேண்டும். இந்த வெற்றி நமது வெற்றியாக அமைய வேண்டும்.”

“திருவெறும்பூர் தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. பெல் (BHEL) தொழிற்சங்கத்தில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் தி.மு.க.தான் முதன்மையான சங்கமாக இருந்துள்ளது. 1974 முதல் 1989 வரை இப்பகுதி கம்யூனிஸ்ட் கட்சிகளின் கோட்டையாக இருந்தது. 1996 க்குப் பிறகு தி.மு.க. தலைவரிடம் பேசி, இந்தத் தொகுதியை நாம் மீட்டெடுத்துத் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம். மீண்டும் இந்தத் தொகுதியைத் தக்க வைப்பது நமது கடமை.”

“தி.மு.க. கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சிகளை நாம் எப்போதும் மதிக்கிறோம். இந்திய யூனியன் முஸ்லிம் லீக், எஸ்.டி.பி.ஐ, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்குத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. திருச்சியில் துறையூர் (காங்கிரஸ்), மணப்பாறை (ம.ம.க.), திருச்சி கிழக்கு (இனிக்கோ) என இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழக முதல்வர் தனது தேர்தல் பிரச்சாரத்தைத் திருவாரூரில் தொடங்கி, இரண்டாவதாகத் திருச்சியில் தொடங்குகிறார். திருச்சி உழவர் சந்தையில் நடைபெறும் காலைப் பொதுக்கூட்டம் ஒரு மிகப் பெரிய திருப்புமுனையாக அமைய வேண்டும். அண்டை மாவட்டமான கரூரில் நடைபெறும் கூட்டத்தை விட, திருச்சியில் அதிகப்படியான தொண்டர்கள் திரண்டு நமது பலத்தை நிரூபிக்க வேண்டும்.”

“திருவெறும்பூர் தொகுதியில் 30,000 முஸ்லிம் வாக்காளர்கள், 20,000 கிறிஸ்தவ வாக்காளர்கள் மற்றும் 45,000 தொழிலாளர் வாக்குகள் உள்ளன. அனைவரும் ஒற்றுமையாகப் பாடுபட்டால், ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மகேஷ் பொய்யாமொழி வெற்றி பெறுவது உறுதி. அடுத்த 10 ஆண்டுகளுக்கான முதல்வரின் ஏழு கனவுத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, தமிழக முதல்வருக்கு நாம் அளிக்கும் முதல் வெற்றியாக மகேஷின் வெற்றி இருக்க வேண்டும்.”

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

### அரியலூர் மாவட்டத்தில்

# மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில்!

அரியலூர், ஏப். 1 -

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு ஒரு மாபெரும் மாற்றுக் கட்சி தோழர்கள் இணைப்பு விழா அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் மாநில காங்கிரஸ் (த.மா.கா) கட்சியின் மாவட்டத் தலைவர் பனங்கூர் ஜெயராமன் அண்மையில் அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்ததைத் தொடர்ந்து, அதனை தொடர்ந்து அவரது தலைமையில் 300 பேர் நேற்று தங்களை திராவிட முன்னேறக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

நமது திராவிட மாடல் அரசின் ஈடில்லாச் சாதனைகளையும், மக்கள் நலன் சார்ந்த சிறப்பான ஆட்சியையும் பெருமிதத்தோடு ஏற்றுக்கொண்ட இந்தச் செயல்வீரர்கள் அனைவரையும் கழகத்தின் சார்பில் மிகுந்த அன்போடு இணைந்த அனைவருக்கும் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லதா பாலு, பனங்கூர் ஜெயராமன், மண்டல வர்த்தக அணி தலைவர் காமராஜ், மாவட்டப் பொருளாளர் கல்யாணசுந்தரம், மாவட்ட துணைத் தலைவர் விஜயகுமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன், முன்னாள் வட்டார தலைவர் சௌந்தரராஜன், முன்னாள் கவுன்சிலர் சுரேஷ், முன்னாள் தலைவர் கோ. சுப்பிரமணியன், வட்டாரத் தலைவர் பனங்கூர் சுப்பிரமணியன், மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.வி செல்வராஜ், மாவட்டப் பிரதிநிதி கரிகாலன் மாவட்ட பொதுச் செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் ரவிச்சந்திரன், மாவட்டப் பிரதிநிதி குணசேகரன், வட்டார துறை தலைவர் ஐயப்பன், இளைஞரணி வட்டார தலைவர் தினேஷ்குமார், இளைஞர் அணி தலைவர் ராஜு, இளைஞரணி துணைத் தலைவர் சரவணன், மாட்டார துணைத் தலைவர் சிவபெருமாள், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சுரேஷ், வட்டார துணைத் தலைவர் ராமதாஸ், மாவட்ட செயலாளர் பால முருகன், துணைத்தலைவர் ராமு, கிராம கமிட்டி தலைவர் சிவக்குமார், ஜெயக்குமார், என்ன அரசு தேவேந்திரன், சுப்பிரமணியன், பாஸ்கர், ராமு, சமுத்திர ராஜ், மகேந்திரன், ரமேஷ், சிலம்பரசன், மணிகண்டன், குகன் மற்றும் மாவட்டக் கழக துணை செயலாளர் சந்திரசேகர் ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா. கெண்ணடி ,அசோக. சக்கரவர்த்தி,கோ. அறிவழகன் மா.அன்பழகன் தெய்வ.இளையராஜா, இரா.அண்ணாதுரை ப.தனவேல், ஏ.ஜி.எஸ்.முருகன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

“ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்!”




மயிலாடுதுறை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற வேட்பாளர் நிவேதா எம். முருகன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக துணை செயலாளர் மு.ஞானவேலன் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சாத்தூர் பாலகிருஷ்ணன்

### ஏப்ரல் 1 (1976)



**சுயமரியாதை இயக்கச் சுடர் சாத்தூர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**துவக்க காலம் தொட்டு இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் நீத்தவர்.**


**“சாத்தூர் பாலகிருஷ்ணன் – அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த ஆருயிர் உடன்பிறப்பு!” என தலைவர் கலைஞர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எம். கண்ணபிரான்

### ஏப்ரல் 1 (1975)



**பள்ளிப்படிப்பின்போதே தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். திராவிடர் கழகத்தில் வண்ணைப் பகுதியில் முக்கிய செயல்வீரராக செயல்பட்டவர்.**

**தி.மு.க. துவங்கியதும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். திரு. என்.வி. நடராசன் அவர்கள் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோது இவர் மாவட்டத் துணைச் செயலாளராக பணியாற்றியவர். பின்னர், சென்னை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.**

**கழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய போராட்டமான மும்முனைப் போராட்ட காலத்தில் தலைநகர் சென்னையின் மாவட்டச் செயலாளராக இவர் ஆற்றிய பணிகள் மும்முனைப் போராட்டத்தைப் போலவே முக்காலமும் மறையாத அற்புதத் தொண்டாகும்.**

**தந்தை பெரியார் அவர்களிடமும், பேரறிஞர் அண்ணா அவர்களிடமும் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்களிடமும் அன்பு கொண்டவர்.**

**“கழகம்! கழகம்!! அது ஒன்றே அவரது உயிர் மூச்சோடு சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது” என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்பு கடிதத்தில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**